24. உன்னதத்தின் தேவனே

பல்லவி

உன்னதத்தின் தேவனே
உன்னதத்தின் ராஜனே
உயர்த்திடுவோம் நீர் உயர்ந்திடுவீர்

அனுபல்லவி

*பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தரே*
*நீர் பாத்திரர் பாத்திரர் பாத்திரரே*

சரணங்கள்

1. உலகில் இருக்கும் அவனைவிட
என்னில் இருப்பவர் பெரியவரே
- பரிசுத்தர்

2. உமக்கு ஒப்பானவர் ஒருவர் இல்லை
உமக்கு மேலானவர் யாருமில்லை
- பரிசுத்தர்

3. எக்காலத்திலும் உம்மை துதித்திடுவோம்
எந்நேரமும் உம்மை தொழுதிடுவோம்
- பரிசுத்தர்

4. அல்லேலூயா துதிகளை செலுத்திடுவோம்
என்றென்றும் அரசாளும் தேவனுக்கே
- பரிசுத்தர்